திருப்பூர் தெற்குப் பிரிவு காவல் நிலையத்துக்குக் கட்டடம்.

*665 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் தெற்குப் பிரிவு காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் தெற்குப் பிரிவு காவல் நிலையம் சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் தான் வைக்கப்பட்டிருக்கிறது. அது டிசம்பர் மாதம்தான் துவக்கப் பட்டது. புதிய காவல் நிலையத்திற்கு வாடகைக் கட்டடம் என்று இல்லாமல், சொந்தக் கட்டடம் கட்ட அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்மிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த இடத்திற்குத் தேவையானது சுமார் 4 ஆயிரம் சதுர அடியாகும். இது குறித்து நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான செயற்குறிப்பு தயாரித்து அனுப்பும்படி கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொல்லப்பட்டிருக் கிறது. அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு, திட்டமும் மதிப்பீடுகளும் தயார் செய்து கொடுக்கப்பட்ட பிறகு, ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Thefts

* 666 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state--

(a) the number of complaints of house breaking and theft received from residents of Todhunter Nagar during the period from April to July 1971; and

(b) the details thereof?

மாண்புபுமிகு டாக்டர் மு. கருணாநிதி :

(அ) வீடுபுகுந்து களவாடியது குறித்த புகார் ஒன்று, தாதண்டர் நகரில் குடியிருப்பவர் ஒருவரால், சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது.

(இ) குற்றஞ்சாட்டப்பட்ட காஞ்சீபுரத்தைச் சேர்ந்த தாமோதரன் பூட்டை உடைத்து வீட்டிற்குள் புகுந்து ரூ 200 மதிப்புள்ள எவர்சில்வர் பாத்திரங்களைத் திருடினார். அவர் கைது செய்யப்பட்டு, அப்பாத்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவருக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்டதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் தனது குடியிருப்பை அறிவிக்குமாறு கட்டளையிடப்பட்டார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, டீச்சர்ஸ் காலேஜுக்கு அருகில் உள்ள தாதண்டர் நகரில் சுமார் 300 குடும்பங்கள் இருக்கின்றன. இங்கு அதிகமாகக் குடியிருப்பவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்தான். அவர்கள் பகல் நேரத்தில் அலுவலகங்களுக்கு வந்து விடுகிறார்கள். அந்தக்